**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUMANGALAM**
**Case No:CC.514/2022**
**Prosecution Witnesses :1**

| | | | |
|---|---|---|---|
| Name | : **லோகமணி** | Caste | : |
| Father 's Name / Husband Name | : **தர்மர்** | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

(எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர். அரசு உதவி வழக்கறிஞர் ஆஜர் இல்லை)
**(16.03.2026)**
**முதல் விசாரணை**

சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் சொல்ல அனுமதிக்கப்படுகிறார்.

நான் தற்போது மேலஉரப்பனுரில் குடியிருந்து வருகிறேன். நான் விவசாய வேலை செய்து வருகிறேன். சுமார் 11 வருடங்களுக்கு முன்பு எங்கள் ஊர் மேலஉரப்பனுரில் எதிரிகள் வீட்டு முன்பு கன்று போட்டது சம்பந்தமாக ஆஜர் எதிரிகளுக்கும் எங்களுக்கும் பிரச்சினை நடந்தது. ஆஜர் எதிரிகள் 3 பேரும் கம்பியால் என் தலையில் அடித்தார்கள். எனது மகள் லட்சுமியை காலை பால் வாங்க போகும் போது எதிரிகள் அடித்துவிட்டார்கள். அதை கேட்க போகும் போது என்னையும் அடித்துவிட்டார்கள். என்னை திருமங்கலம் அரசு மருத்துவமனைக்கு எனது மகளும் மற்றவர்கள் சேர்த்தார்கள். மருத்துவமனையில் வந்து போலிசார் என்னை விசாரித்து கையெழுத்து பெற்றார்கள். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலம் நான் கொடுத்தது தான். அந்த புகார் வாக்குமூலம் நான் சொல்ல போலிசார் எழுதிக் கொண்டார்கள். அந்த புகார் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்தும் என்னுடையது. **அந்த புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

சம்பவத்தன்று சிவராத்திரி என்றால் சரிதான். நாங்கள் விளாச்சேரி கோவிலுக்கு சென்றுவிட்டு வீடு திரும்பினோம். நாங்கள் திரும்பும் போது அதிகாலை 4 மணி. நல்ல இருட்டாக இருந்தது. சம்பவயிடம் சந்து குறுகலான சந்து என்றால் சரிதான். எங்களுக்கும் எதிரிகளுக்கும் எந்த பிரச்சினையும் இல்லை. பிரச்சினை இருப்பதாக நான் போலிசாரிடம் சொல்லிகொள்ளவில்லை. சம்பவம் நடந்தவுடன் காவல் நிலையம் சென்றோம். காவல் நிலையத்தில் புகார் கொடுத்துவிட்டு மருத்துவ நமுனா பெற்று தான் சென்றோம். காவல் நிலையத்தில் எனது மகள் லட்சுமி புகார் கொடுத்தார். அங்கு லட்சுமி புகாரில் கையெழுத்து செய்து கொடுத்த பின் போலிசார் சொல்லியதால் மருத்துவமனைக்கு சென்றோம். மருத்துவமனையில் வந்து என்னிடம் கையெழுத்து வாங்கி சென்றார்கள். அ.சா.ஆ.1 எனது மகள் லட்சுமி கொடுத்தது இல்லை. அது நான் கொடுத்தது. எனக்கு ஏற்பட்ட காயம் நானும் எனது மகளும் இருட்டில் இருசக்கர வாகனத்தில் செல்லும் போது கீழே விழுந்து ஏற்பட்ட காயம் என்றால் சரியல்ல. இதனால் ஏற்பட்ட காயத்தை வைத்து எங்களுக்குள் ஏற்பட்ட முன்பகையை காரணமாக வைத்து எதிரிகள் அடித்ததாக நான் பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. எனக்கு ஏற்பட்ட காயத்திற்கும் எதிரிகளுக்கும் எவ்வித சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை**. இல்லை

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUMANGALAM**
**Case No:CC.514/2022**
**Prosecution Witnesses :2**

| | | | |
|---|---|---|---|
| Name | : **லட்சுமி** | Caste | : |
| Father 's Name / Husband Name | : **சின்னபாண்டி** | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

(எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர். அரசு உதவி வழக்கறிஞர் ஆஜர் இல்லை)
**(16.03.2026)**
**முதல் விசாரணை**

சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் சொல்ல அனுமதிக்கப்படுகிறார்.

நான் தற்போது மேலஉரப்பனுரில் குடியிருந்து வருகிறேன். நான் இல்லத்தரசியாக இருந்து வருகிறேன். கடந்த 17.02.2015ம் தேதி இரவு சுமார் 10 மணிக்கு நானும் எனது அப்பா அம்மா ஆகியோர்கள் அனைவரும் கோவிலுக்கு சென்றுவிட்டு வீடு வந்தோம். வீட்டிற்கு வந்து பார்த்த போது நாங்கள் கட்டி வைத்திருந்த அப்பாவின் மாடு காணவில்லை. தேடினோம். ஆஜர் 1 மற்றும் 2 எதிரிகளின் அப்பா வீட்டில் கட்டி போட்டிருந்தார்கள். இதனை பார்த்த அ.சா.1 எனது அப்பா மாட்டை அவிழ்க்க போனார். அப்போது ஆஜர் 3 வது எதிரி எனது அப்பாவை அசிங்கமான வார்த்தைகளால் பேசினார். பின்பு இதை பார்த்து நானும் எனது அம்மாவும் சென்று 3 வது எதிரியிடம் சென்று ஏன் இவ்வாறு பேசுறிர்கள் என்று கேட்டோம். வாய்தகராறு வந்தது. அதன் பிறகு மாட்டை பிடித்து வீட்டிற்கு வந்துவிட்டோம். மறுநாள் 18.02.2015ம் தேதி காலை சுமார் 4 முதல் 4.30 மணியிருக்கும். நான் பால் வாங்க சென்றேன். பால்வாங்கிவிட்டு எதிரிகளின் வீட்டு சந்து வழியாக வந்து கொண்டிருந்தேன். ஆஜர் 1 மற்றும் 2 எதிரிகள் 2 பக்கம் சந்துகளிலும்

மறைந்து நின்று கொண்டிருந்தார்கள். 3 வது எதிரி என்னை நோக்கி வந்தார். 1 மற்றும் 2 வது எதிரிகள் கையில் கம்பியுடன் நின்று கொண்டு என்னை எனது பின்புறம் தோள்பட்டையில் மாறி மாறி அடித்தார்கள். நான் கையில் வைத்திருந்த பால் செம்பை கீழே போட்டுவிட்டேன். நான் வலியால் சத்தம் போடவும் என்னை பக்கத்து வீட்டுக்காரர்கள் கூட்டி சென்றுவிட்டார்கள். பின்பு எனது அப்பா அ.சா.1 ஏன் இவ்வாறு அடிக்கிறீர்கள் என்று எதிரிகளிடம் கேட்டார். அதற்கு எனது அப்பாவையும் 1 மற்றும் 2 எதிரிகள் கம்பியால் தலையில்அடித்துவிட்டார்கள். முதலில் நாங்கள் திருமங்கலம் நகர் நிலையத்திற்கு சென்றோம். அவர்கள் எங்களை முதலில் மருத்துவமனைக்கு போகுமாறு அனுப்பிவைத்தார்கள். பின்பு நானும் எனது அப்பா அ.சா.1ம் திருமங்கலம் அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தோம். அப்போது போலிசார் எனது அப்பா அ.சா.1னிடம் புகார் வாக்குமூலம் பெற்றார்கள். என்னையும் விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் போலிசார் விசாரிக்கும் போது முதல் விசாரணையில் சொன்ன அனைத்து விஷயங்களையும் நான் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் என்னுடைய வாக்குமூலத்தில் முந்தைய நாள் 10 மணிக்கு சம்பவம் நடந்ததாகவும் அதன் தொடர்ச்சியாக நான் முதல் விசாரணையில் சொன்னது போல் எதுவும் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை. காவல் நிலையத்தில் நாங்கள் எதுவும் புகார் கொடுத்தோமா என்றால் இல்லை மருத்துவ நமுனாவும் கொடுத்துவிடவில்லை. எங்களுக்கும் எதிரிகளுக்கும் முன் பகை இருந்ததா என்றால் இல்லை. நான் போலிசார் விசாரணையில் எங்களுக்குள் முன்பகை இருந்ததாக சொன்னேனா என்றால் சொல்லவில்லை. எனது வாக்குமூலத்தில் போலிசார் விசாரணையில் எங்களுக்கும் சந்தோஷம் குடும்பத்திற்கும் நீண்ட பிரச்சினை இருந்து வந்தது என்று வாக்குமூலத்தில் உள்ளது என்றால் சரிதான். எங்களுக்குள் இருந்த முன்பகையை மனதில் வைத்து தான் நடக்காத சம்பவத்திற்கு புகார் கொடுத்தோம் என்றால் சரியல்ல. நான் காயம்பட்டவுடன் என்னை தவராஜ் என்பவரின் வீட்டிற்கு அவரது மனைவி செல்வி கூட்டி சென்றுவிட்டார். நான் சத்தம் போடவும் எனது அப்பா வந்துவிட்டார். என்னை

கூட்டி செல்லும் போது எனது அப்பாவை எதிரிகள் அடித்ததை பார்த்தோம். என்னை அடித்த பிறகு தான் எனது அப்பா வந்தார். எனது அப்பா என்னை எதிரிகள் அடிக்கும் போது தடுக்க வந்தபோது அவருக்கு காயம்பட்டது என்றால் சரியல்ல. நானும் எனது அப்பாவும் கோவிலுக்கு சென்றுவிட்டு இருசக்கர வாகனத்தில் வரும் போது இருட்டில் தடுமாறி கீழே விழுந்து ஏற்பட்ட காயத்தை வைத்து எதிரிகள் மீது இருக்கும் முன்பகை காரணமாக அவர்கள் அடித்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எவ்வித சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை**. இல்லை

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUMANGALAM**
**Case No:CC.514/2022**
**Prosecution Witnesses : 3**

| | | | |
|---|---|---|---|
| Name | : **ராமாயி** | Caste | : |
| Father 's Name / Husband Name | : **லோகமணி** | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

(எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர். அரசு உதவி வழக்கறிஞர் ஆஜர் இல்லை)
**(16.03.2026)**
**முதல் விசாரணை**

சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் சொல்ல அனுமதிக்கப்படுகிறார்.

நான் தற்போது மேலஉரப்பனுரில் குடியிருந்து வருகிறேன். நான் இல்லத்தரசியாக இருந்து வருகிறேன். அ.சா.1 எனது கணவர். அ.சா.2 எனது மகள் ஆவார், கடந்த 2015ம் வருடம் தேதி மாதம் ஞாபகம் இல்லை. நானும் எனது கணவர், மகள் ஆகியோர்கள் கோவிலுக்கு சென்றுவிட்டு வீடு வந்த போது எங்களது கன்றுகுட்டி காணவில்லை. நாங்கள் தேடி பார்த்த போது கன்றுகுட்டி சந்தோஷம் வீட்டில் நின்றுகொண்டிருந்தது. நானும் எனது மகளும் சென்று ஏன் கட்டி போட்டிர்கள் என்று கேட்டோம். அப்போது எங்களுக்கும் ஆஜர் எதிரிகளுக்கும் சண்டை வந்தது. பின்பு நாங்கள் மாட்டை வீட்டிற்கு கொண்டு வந்துவிட்டோம். மறுநாள் காலை 4 மணிக்கு எனது மகள் பால் வாங்க சென்றார். 3 வது எதிரி பிடித்துக் கொண்டார். அப்போது எதிரிகள் 1 மற்றும் 2 ஆகியோர்கள் கம்பியால் எனது மகளை அடித்துவிட்டார். நானும் எனது கணவர் அ.சா.1ம் சம்பவயிடத்திற்கு சென்றோம். எனது கணவர் அ.சா.1 ஐ 1 மற்றும் 2 எதிரிகள் கம்பியால்

அடித்துவிட்டார். பின்பு நாங்கள் மருத்துவமனைக்கு சென்றோம். அ.சா.1 ,2 க்கு சிகிச்சை அளிக்கப்பட்டது போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

எனக்கு படிக்க தெரியாது. சம்பவத்திற்கு முதல் நாள் சிவராத்திரி. எனது பேத்திக்கு மொட்டை போடுவதற்காக கோவிலுக்கு சென்று விட்டோம் என்றால் சரிதான். நான் போலிசார் விசாரணையில் முதல் நாள் மாட்டை எதிரிகள் கட்டி போட்டார்கள் என்ற விவரத்தை சொல்லவில்லை என்றால் சரியல்ல. எங்களுக்கும் எதிரிகளுக்கும் எவ்வித முன்பகையும் இல்லை. போலிசார் எங்களுக்கும் சந்தோஷம் குடும்பத்திற்கும் முன்விரோதம் இருந்ததாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. எனக்கு எனது மகளை அடிக்கும் சத்தம் கேட்டு தான் ஓடிவந்தோம். நாங்கள் வரும் போது தவராஜ் மனைவி செல்வி பிடித்திருந்தார். எனது மகளும் அ.சா.1ம் கோவிலுக்கு சென்றுவிட்டு இருசக்கர வாகனத்தில் வரும் போது இருட்டில் தடுமாறி கீழே விழுந்து ஏற்பட்ட காயத்தை வைத்து எதிரிகள் மீது இருக்கும் முன்பகை காரணமாக அவர்கள் அடித்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எவ்வித சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல. நானும் எனது கணவர் மகளை அழைத்துக் கொண்டு முதலில் காவல் நிலையம் தான் சென்றோம். அங்கு காயம்பட்ட எனது மகளை போலிசார் விசாரித்தனர். எனது மகள் அனைத்து விபரங்களையும் சொன்னார். அதன் பின்பு மருத்துவ நமுனா பெற்று நாங்கள் காவல்நிலையம் சென்றோம்.

எனது மகளுக்கு ஏற்பட்ட காயம் எதிரிகளால் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. முன்விரோதம் காரணமாக கீழே விழுந்து ஏற்பட்ட காயத்தை வைத்து எதிரிகள் அடித்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை**. இல்லை